# சிறப்பு சார்பு நீதிமன்றம் (LAOP) எண்.1 , ஜெயங்கொண்டம்

அசல் வழக்கு எண். 24/2024

நாள்:20.04.2026

வா.சா. 1 – குருநாதன்

2026–ம் ஆண்டு ஏப்ரல் 20–ம் நாள் (1969–ம் ஆண்டு 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.கிருஷ்ணவேனி, கிரேடு–II பெஞ்ச் கிளர்க் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

**1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு இந்த வழக்கு சம்மந்தப்பட்ட விவரங்கள் தெரியும். இந்த வழக்கில் நானும் ஒரு வாதி என்றால் சரிதான். சீனிவாசன் எனது தாத்தா. சிங்காரு, பொன்னுசாமி, ராசு என்ற 3 மகன்கள் வாரிசுகளா என்றால் சரிதான். பொன்னுசாமி என்பவருக்கு சாமிதுரை, அருணாசலம், மருதாம்பாள், சரஸ்வதி மற்றும்1ம் பிரதிவாதி ஆகிய 5 பேரும் வாரிசுகள் என்றால் சரிதான். பொன்னுசாமிக்கு 1ம் பிரதிவாதி ராமு மற்றும் சாமிதுரை ஆகியோர்களை மட்டும் வாரிசாக வம்சாவழி பட்டியலில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வம்சாவழி பட்டியல் தவறு என்றாலும் நிறைய வாரிசுகளை சேர்க்காமல் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 29.03.1978 தேதியிட்ட பாக அட்டவணைப் படி பாகம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி பாக அட்டவணை எழுதிக் கொண்டது எனக்கு தெரியும். அப்போது நான் மைனர் என்றால் சரிதான். பாக அட்டவணைக்கு பிறகு அவர் அவர் சொத்துகளுக்கு தனி பட்டா ஏற்பட்டு அனுபவித்து வருகிறோம் என்றால் சரியல்ல. பாக அட்டவணை ஏற்பட்டது உண்மை ஆனால் தனித்தனியாக அனுபவிக்கவில்லை. என் தாத்தா சீனிவாசன் ஆசிரியராக இருந்த விவரம் தெரியும். சீனிவாசன் ஆங்கிலத்தில் தான் கையெழுத்து போடுவார் என்ற

விவரம் தெரியும். என் தந்தையின் கையெழுத்து நன்றாக தெரியும். 29.03.1978 பாக அட்டவணையின் அசல் யாரிடம் உள்ளது என்றால் 3 பேரிடமும் ஒவ்வொரு அசல் உள்ளது. பாக அட்டவணையின் அசலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. பாக அட்டவணையின் அசலை நான் பார்த்துள்ளேன். பாக அட்டவணையில் சீனிவாசனின் வாரிசுகள் அனைவரும் கையெழுத்து போட்டுள்ளார்கள். மலர்கொடிக்கு என் அப்பா சொத்து கொடுத்துள்ளார் என்றால் தெரியாது. நான் மலர்கொடிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யவில்லை. என் அப்பா இருந்த வரையில் பிலிச்சிக்குழி கிராமத்திற்கு நான் சென்றதில்லை. தாவா சொத்தில் 1ம் பிரதிவாதி 30 வருடமாக வீடு கட்டி குடியிருக்கிறார் என்றால் 1994–ல் இருந்து குடியிருந்து வருகிறார். 1994–ல் 1ம் பிரதிவாதி பெயருக்கு பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் தெரியாது. தவறான முறையில் பட்டா வாங்கியிருப்பார். 1ம் பிரதிவாதிக்கு தவறான முறையில் பட்டா வழங்கப்பட்ட விவரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் 20 வருடங்களுக்கு முன்பு தெரியும். தவறான முறையில் பட்டா வழங்கப்பட்டதற்கு மனு எதுவும் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. பஞ்சாயத்து வைத்து 1ம் பிரதிவாதியிடம் கேட்டோம். இந்த வழக்கில் அரசாங்க தரப்பினரை சேர்க்கவில்லை என்றால் சரிதான். நான் சீனிவாசனின் 3 வது மகனான ராசுவின் 2 வது மகன் என்றால் சரிதான். என் தந்தைக்கு கிருஷ்ணமூர்த்தி, நான், பழனியப்பன் மற்றும் வசந்தா ஆகியோர் வாரிசுகள் என்றால் சரிதான். வசந்தாவை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். வசந்தாவிற்கு சொத்து பிரித்துக் கொடுத்துவிட்டதால் இந்த வழக்கில் சேர்க்கவில்லை. மேற்கண்ட விவரத்தை என்னுடைய வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. வசந்தாவை இந்த வழக்கில் சேர்க்காததால் இந்த வழக்கு பிழையுடையது என்றால் சரியல்ல. கிருஷ்ணமூர்த்தி, பழனியப்பன், வசந்தா, எனக்கு

ஆகியோருக்கிடையில் பாக அட்டவணை ஏற்படவில்லை. தாவா சொத்தில் எனக்கோ கிருஷ்ணமூர்திக்கோ, பழனியப்பனுக்கோ எவ்வளவு பாகம் என்று பிரித்துக் காண்பிக்கவில்லை என்றால் சரிதான். எங்களுக்குள் பாகம் பிரிக்கவில்லை. ஒரே ஒரு இடத்தை தான் 3 அயிட்டமாக வழக்கில் குறிப்பிட்டுள்ளோம். இந்த வழக்கை தாக்கல் செய்ய செந்திலுக்கு பொது அதிகார ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளோமா என்றால் வாய்மொழியாக தெரிவித்துள்ளோம். தாவா சொத்தானது நத்தம் என்றால் சரிதான். தாவா சொத்துக்கு என் தாத்தா பெயரிலோ, என் தந்தை பெயரிலோ வருவாய் துறை ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நத்தத்தில் நீண்ட காலமாக அனுபவத்தின் அடிப்படையில் 1ம் பிரதிவாதிக்கு வருவாய்துறை பட்டா வழங்கியுள்ளது என்றால் தவறு.

**1ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் வைத்து சாட்சி சொன்னவை என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு அவரால் தட்டச்சிடப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்திடப்பட்டது.

/ ஒப்பம் / V. பிரேம்குமார்,
சிறப்பு நீதிபதி எண்.1,
ஜெயங்கொண்டம்.